# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.268/2024

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw7/Pw2 |
| Name | : சதாசிவம் |
| Father/Husband's Name | : வேலாயுதம் |
| Village | :செங்கல்பட்டு |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.05.2026.

**முதல் விசாரணை:**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். பிப்ரவரி மாதம் 2016 ல் சத்யா என்பவரின் செயினை அறுத்ததாக தகவல் சொன்னார்கள். நான் அவர்களுடன் செங்கல்பட்டு தாலுகா காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். எதிரியை நான் பார்த்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. செட்டிபுண்ணியம் கூட்ரோடு அருகே போலீசார் வரைப்படம் வரைந்து இரு நபர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள். அதில் ஒரு நபரின் பெயர் பூபாலன். வெகு நாட்கள் ஆனதால் அவரை என்னால் அடையாளம் காட்ட இயலாது. அந்த திருடிய நகைகளை அவர்களுடைய உறவினர் வீட்டில் அஞ்சூரில் வைத்திருப்பதாக சொன்னதின் பேரில் போலீசார் என்னை அழைத்து சென்றார்கள். அங்கு புதைத்து வைத்திருந்த நகைகளை எடுத்தார்கள். போலீசார் விசாரணை செய்யததால் எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டு கையெழுத்து

வாங்கினார்கள். நானும் ஆரோக்கியராஜீம் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலதநத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அதசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்தகைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு ஞாபகம் இல்லை. நான் கையெழுத்து போட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் சொன்னார்கள். இதற்கு முன் சாட்சியம் அளிக்கும் போது எதிரியின் அடையாளம் தெரியாது என்று சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். சாட்சியாக இருக்கும் படி கையெழுத்து போட்டேன் என்று சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். காவல் அதிகாரிக்கு நன்கு அறிமுகமாக நபர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.268/2024**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : ஏபல் வர்ஜினியா |
| Father/Husband's Name | : ஆரோக்கியராஜ் |
| Taluk | : செங்பல்பட்டு |
| Calling | : |
| Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26.05.2026.

**முதல் விசாரணை:**

நான் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.05.2016 ல் மதியம் 3 மணியளவில் திம்மாவரம் மெயின் ரோட்டில் இருந்து என் வீட்டிற்கு திரும்பும் வழியில் நான் குடையுடன் நடந்து சென்று கொண்டிருக்கும் போது பின் பக்கத்தில் யாரோ வருவது போல் இருந்தது. திடீரென என்கழுத்தில் கீறல் போட்டது போல் இருந்தது. நான் கழுத்தில் அணிந்திருந்த தாலி சரடு மற்றும் மற்றொரு செயினை ஒரு நபர் அறுத்து சென்று ஓடிக் கொண்டிருந்தார். நான் திரும்பி சென்று பார்த்த போது மற்றொரு நபர் பைக்கில் அமர்ந்து கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் பைக்கில் சென்றுவிட்டார்கள். கர்சிப்பில் அவர்கள் முகத்தை மறைத்திருந்தார்கள் அவர்கள் முகத்தை நான் பார்க்க முடியவில்லை. நான் அணிந்திருந்த தங்க செயின் மற்றும் தாலி சரடு மொத்தம் 7 சவரன் இருக்கும். அதன்பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் **அதசா.ஆ.1**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிறிது நாட்கள் கழித்து என்னுடைய நகை கிடைத்துவிட்டது என்று போலீசார் என்னிடம் தகவல் சென்னார்கள். நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் அது. அந்த புகைப்படம் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தாரகள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

புகாரை நான் தான் எழுதினேன். சா.பொ.1ல் அறுந்ததற்கான எந்த அறிகுறியும் இல்லை என்றால் என்னிடம் முழு செயினாக தான் கொடுத்தார்கள். கழுத்தில் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை. புகாரில் எனது கழுத்தில் காயம் ஏற்பட்டது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வீட்டில் நகையை தொலைத்து விட்டு போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu